### தொடர்ந்து 3 நாட்கள்

# $4\frac{3}{4}$ லட்சம் பேர் மெட்ரோ ரெயிலில் இலவச பயணம்

## இன்றும் இலவசமாக பயணிக்கலாம்

சென்னை, பிப்.13–

சென்னை வண்ணாரப்பேட்டை–டி.எம்.எஸ். இடையே புதிய மெட்ரோ ரெயில் சேவையை கடந்த 10–ந்தேதி திருப்பூரில் இருந்து பிரதமர் நரேந்திரமோடி தொடங்கிவைத்தார்.

இதைத்தொடர்ந்து 10, 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் அனைத்து வழித்தடங்களிலும் பொதுமக்கள் மெட்ரோ ரெயிலில் இலவசமாக பயணிக்கலாம் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிவித்தது. அதன்படி, 10–ந்தேதி 67 ஆயிரம் பேரும், 11–ந்தேதி 2 லட்சத்து ஆயிரத்து 550 பேரும் இலவசமாக பயணம் செய்துள்ளனர். நேற்று மட்டும் சுமார் 2 லட்சம் பேர் இலவச பயணம் மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

இன்றும்(புதன்கிழமை) மெட்ரோ ரெயிலில் பொது மக்கள் இலவசமாக பயணிக்கலாம் என்று மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.